# நாட்டிய ராணி

பெ. தூரன்



பழனியப்பா பிரதர்ஸ்
சென்னை - 14 திருச்சி - 2 சேலம் - 1
கோயமுத்தூர் -1 மதுரை - 1



NATIYA RANI

**Subject :** Story For Children

**Author :** P. Thooran

**Illustrator :** Ranu

**Publishers :** Palaniappa Brothers, Madras - 14, Tiruchi - 2, Salem - 1, Coimbatore - 1, Madurai - 1.

**Printers :** Asian Printers, Madras - 14.

**Price :** **Re. 1-00**

**First Edition :** 14 th November, 1970 (Children's Day)

# வணக்கம்

குழந்தைகளுக்குக் கதை என்ருல் கற்கண்டு போல. கதை கேட்பதிலும், கதை படிப்பதிலும் அவர்களுக்குள்ள ஆர்வம் வேறு யாருக்குமே இருக்காது. அவர்களுக்கேற்றவாறு கதை சொல்வதற்குத் தனித்திறமை வேண்டும். அத்திறமை பெற்று விளங்குபவரில் ஒருவர் திரு. பெ. தூரன் அவர்கள். அவர்கள் எழுதிய மூன்று கதைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. இந்நூலே அன்புள்ளம் கொண்ட குழந்தைகளுக்கு ஆசையுள்ளம் கொண்ட பெற்ருேர்கள் வாங்கிக் கொடுத்து எங்களுக்கு ஆதரவு தர வேண்டுகிருேம்.

## கதையும் பக்கமும்


- நாட்டிய ராணி ... 1
- குருவியும் சிங்கமும் ... 8
- சர்க்கஸ் குரங்கு ... 16



# நாட்டிய ராணி

ஒரு சின்ன ஆட்டுக்குட்டி ஒரு பண்ணையிலே இருந்தது. அதன் உடம்பிலே வெள்ளையும் கறுப்பும் பட்டை பட்டையாகப் பளபள்வென்று அழகாகக் காணப்பட்டன. இந்த ஆட்டுக்குட்டி எப்பொழுதும் துள்ளிக் குதித்து பசு, எருமை, காளை ஆகிய எல்லாவற்றோடும் விளையாடிக்கொண்டே இருக்கும். காளைமாட்டோடு முட்டிமுட்டிக் குறும்பு செய்யும். படுத்திருக்கும் ஒரு பெரிய எருமை மேலே ஏறிக் கொண்டு நடனம் ஆடும். எருமைக்கு அது முதுகைச் சொரிந்து விடுவதுபோல் இன்பமாக இருப்பதால் பேசாமல் படுத்திருக்கும். சிலசமயங்களிலே தாய் ஆட்டின் மீது ஏறிக் குதித்து விளையாடும். தாய் ஆட்டிற்கு ஒரே மகிழ்ச்சி.

இப்படி இந்தச் சின்ன ஆட்டுக்குட்டி துள்ளித் துள்ளிக் குதிப்பதைப் பார்த்து ஆடுமாடு மேய்ப்பவர்கள் இதற்கு நாட்டியராணி என்று பெயர் வைத்திருந்தார்கள்.

காலையிலே ஆடுமாடுகள் புல் மேய்வதற்காகக் கழனிகளுக்குச் செல்வது வழக்கம். பட்டி நாய்களும் அவற்றோடு பாதுகாப்புக்காகச் சென்று விடும். பண்ணையிலே யாரும் இருக்கமாட்டார்கள்.

ஆட்டுக்குட்டிகளையெல்லாம் ஒரு அறையில் ஓட்டி அந்த அறையைப் பூட்டி விட்டுச் சென்று விடுவார்கள். அதனால் குட்டிகளும் எந்தவிதமான ஆபத்தும் இல்லாமல் இருக்கும். மாலை வேளையில் ஆடுமாடுகள் பண்ணைக்குத் திரும்பிய சத்தம் கேட்டவுடனே குட்டிகள் ஒரே அடியாகக் கத்தத் தொடங்கிவிடும். காலையிலிருந்து மாலை வரை அடைபட்டுக் கிடந்தால் அவற்றிற்கு வயிறு பசிக்காதா என்ன? அறையைத் திறந்துவிட்டவுடன் குட்டிகள் அவற்றின் தாய்களிடம் தாண்டிக் குதித்துச் சென்று பால் குடிக்கத் தொடங்கும்.



குட்டிகள் பால் குடிப்பதைப் பார்த்திருக்கிறீர்களா? அதைப் பார்ப்பதற்கே இன்பமாக இருக்கும்.

பட்டணங்களிலே இருப்பவர்களுக்கு அது பெரும்பாலும் தெரியாது. கிராமங்களிலே உள்ள பண்ணைகளில்தான் இந்தக் காட்சியைக் காண லாம். தாய் ஆடு மிகுந்த அன்போடு குட்டிக்குப் பால் கொடுக்கும். வயிறு நிறைந்தவுடன் குட்டி கள் இருட்டாகும் வரையில் துள்ளிக்குதித்து விளையாடும்.

ஒரு நாள் காலையில் ஆடுமாடுகள் வழக்கம் போலப் புல் மேய்வதற்குப் புறப்பட்டன. அன்றைக்கு நாட்டியராணி அறையில் அடை பட்டுக் கிடக்க விரும்பவில்லை. அதனால் எங்கோ ஒளிந்துகொண்டது.

அதன் தாய் அதைத் தேடிக் கண்டுபிடித்து அறைக்குள்ளே போகும்படி சொல்லிற்று.

"போம்மா, நான் எத்தனை நேரம் இந்த அறைக்குள்ளே அடைபட்டுக்கிடப்பது? நான் உள்ளே போகமாட்டேன்" என்று பிடிவாதம் செய் தது நாட்டியராணி.

"கண்ணு, நீ இன்னும் நன்றாக வளர்ந்த பிறகு எங்களோடு வெளியிலே வரலாம். இப்பொழுது நீ தனியாக வெளியில் இருந்தால் ஏதாவது ஆபத்து வரும்" என்று சொல்லிற்று தாய்.

"எனக்கு ஒன்றும் ஆபத்து வராது. நான் அந்த அறைக்குள்ளே போகமாட்டேன்" என்று சிணுங்கிக் கொண்டே நாட்டியராணி பதில் கூறிற்று.

" இந்தப் பக்கத்திலே ஒரு நரி சமயம் பார்த்துக் கொண்டே சுற்றிக்கொண்டிருக்கிறதாம். நான் சொல்வதைக் கேட்டு அதன்படி நட" என்று மறுபடியும் தாய் ஆடு வற்புறுத்தியது.

இருந்தாலும் நாட்டியராணி அறைக்குள்ளே போக மறுத்துவிட்டது.

நேரம் அதிகமாகவே தாய் ஆட்டை மேய்ப்பவர்கள் ஓட்டிக்கொண்டு போய்விட்டார்கள். தாய் கவலையோடு மேயச் சென்றது.

ஆடுமாடுகள் எல்லாம் சென்றுவிட்டன. பண்ணையிலே யாருமே இல்லை. பாதுகாவலுக்காக உள்ள நாய்களும் ஆடுமாடுகளோடு போய் விட்டன.



அந்தச்சமயம் பார்த்து ஒரு குள்ள நரி அங்கே வந்தது. ஆட்டுக்குட்டியைக் கண்டு அதற்கு ஒரே ஆனந்தம். " உன்னைக் கொன்று தின்னப்

போகிறேன்" என்று கூறிக்கொண்டே குட்டியிடம் வந்தது.

அப்பொழுதுதான் நாட்டியராணிக்குத் தாயின் நினைவு வந்தது. "தாய் சொல்லைத் தட்டி நடந்ததால் என் உயிருக்கே ஆபத்து வந்துவிட்டதே. நான் இதுவரையிலும் தாய்சொல்லைத் தட்டியதே இல்லை. இன்று அதற்கு மாருக நடந்துகொண்டதால் என் உயிர் போகப்போகிறது. தாயின் சொல்லை மீறி நடப்பது பெரிய பாவம்" என்று அது ஏங்கலாயிற்று.

நரி கொஞ்சங் கொஞ்சமாக அருகில் வந்து கொண்டே இருந்தது. அதன் வாயில் நீர் ஊற ஆரம்பித்துவிட்டது.

"அம்மா, நீ தெய்வமல்லவா? இனிமேல் உன் சொல்லைத் தட்டவே மாட்டேன். இப்பொழுது இந்த ஆபத்திலிருந்து தப்ப எனக்கு ஒரு தந்திரம் உதயமாகும்படி செய்" என்று நாட்டியராணி மனத்திற்குள்ளேயே வேண்டிக்கொண்டது.

உடனே அதற்கு ஒரு சூழ்ச்சி உதயமாயிற்று.

"நரி மாமா, நரி மாமா நீதான் என்னைத் தின்னப் போகிருய். இங்கு யாருமே இல்லை. ஆதலால் கொஞ்சம் பொறுத்துக்கூட என்னைக் கொன்று தின்னலாம். அப்படித் தின்பதற்கு முன்னுலே எனது நாட்டியத்தை நீ பார்க்கவேண்டாமா? நான் நன்ருக ஆடுவேன். நாட்டியம் முடிந்த பிறகு நீ உன் விருப்பம்போலத் தின்னலாம்" என்றது.

குள்ளநரிக்கும் ஆட்டுக்குட்டியின் நாட்டியம் பார்க்க ஆசையுண்டாயிற்று. மேலும், மாலைநேரம்

வரையில் அங்கு யாருமே வரமாட்டார்கள். அதனால் பயமில்லை என்று அது நினைத்துக் கொண்டது.

"சரி, ஆடு பார்க்கலாம்" என்றது குள்ளநரி.



நாட்டியராணி ஆடத் தொடங்கிற்று. நல்ல நல்ல ஆட்டங்கள். இப்படி ஆடிக்கொண்டே அது சுவர் ஓரத்தில் சாய்த்துவைக்கப்பட்டிருந்த ஒரு சிறிய முரசின் பக்கமாகச் சென்று டக்கு டக்கு என்று ஆடிக்கொண்டே அந்த முரசைத் தலையால் முட்டி, திடும் திடும் என்று சத்தம் உண்டாக்கிற்று.

"அது எதற்கு அந்த திடும்திடும்?" என்று குள்ளநரி கேட்டது.

"ஆடினால் நடனத்திற்கு தகுந்தவாறு தாளம் வேண்டாமா? அதற்குத்தான் இந்த திடும்திடும். இதுவும் சேர்ந்தால் ஆட்டம் இன்னும் நன்றாக இருக்கும்" என்று ஆட்டுக்குட்டி விளக்கம் கொடுத்தது.

"அப்படியா? சரி, திடும் திடும் போட்டே ஆடு" என்று குள்ளநரி உற்சாகத்தோடு சொல்லிற்று.

ஆட்டுக்குட்டி கொஞ்சநேரம் ஆடுவதும் மத்தியிலே திடும்திடும் என்று முரசை வேகமாக முழக்குவதுமாக இருந்தது.

ஏதாவது ஆபத்து வருகின்ற காலத்திலே திடும்தடும் என்று இந்த முரசு ஓசையிட்டால் உடனே பட்டிநாய்கள் அங்கே வந்துவிடும். அப்படி அவைகளைப் பழக்கிவைத்திருந்தார்கள்.



முரசின் ஒலியைக் கேட்டதும் நாய்கள் வேகமாக நாற்கால் பாய்ச்சலிலே அங்கு வந்து சேர்ந்தன. அவற்றைக் கண்டதும் குள்ளநரி தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடியே போயிற்று.

அந்தச் சின்ன ஆட்டுக்குட்டி தந்திரத்தால் உயிர் தப்பியது. அது முதல் அது தாயின் சொல்லை மீறியே நடக்கவில்லை.



# குருவியும் சிங்கமும்

மரங்கள் நெருக்கமாக வளர்ந்திருந்த ஒரு காடு. அதிலே ஒரு மரத்தில் அழகான சிறிய குருவி ஒன்று கூடுகட்டி இரண்டு குஞ்சுகள் பொரித்திருந்தது. குருவிக்குத் தன் குஞ்சுகளைப் பார்த்து ஒரே மகிழ்ச்சி. குஞ்சுகளுக்கு இரை தேடிக் கொண்டுவந்து அது கொடுக்கும். குஞ்சு களைப் பகலிலே குறித்த வேளையில் உறங்க வைக்கும்; இவ்வாறு அன்போடு அவற்றை வளர்த்துவந்தது.

அந்தக் காட்டின் ராஜாவாக ஒரு சிங்கம் இருந்தது. அது குருவி கூடுகட்டியிருந்த மரத்தின் அடியிலேயே வந்து நடுப்பகலில் தூங்கத் தொடங்கிற்று. தூங்கி எழுந்ததும் அது இடிமுழக்கம் போல கர்ஜனை செய்யும். நாள்தோறும் இப்படி அது செய்யவே குஞ்சுகளுக்குத் தூக்கமே வரவில்லை. சிங்கத்தின் கர்ஜனையைக் கேட்டு அவை நடுங்கி அலறின. அதனால் தாய்க்குருவி மிகுந்த கவலையடைந்தது.

ஒருநாள் அந்தக் குருவி சிங்கம் வந்து படுக்கும் நேரத்தில் அதனிடம் பயந்து பயந்து மெதுவாகச்



சென்றது. தன் குஞ்சுகளுக்குத் தூக்கம் வருவதில்லை என்பதை நயமாக எடுத்துச் சொல்லிற்று: " மகாராஜா, இந்த மரத்தடியில் தாங்கள் நன்றாகத் தூங்குங்கள்; ஆனால் கர்ஜனை செய்வதை மட்டும் வேறெங்காவது சென்று செய்யுங்கள் " என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டது. அதைக் கேட்ட சிங்கத்திற்குப் பெரிய கோபம் வந்துவிட்டது. "அற்பக் குருவியே, இங்கே நிற்காதே, நின்றால் ஒரே அடியில் உன்னைக் கசக்கிப் பிழிந்துவிடுவேன் " என்று கோபமாகச் சொல்லிற்று.

இதைக் கேட்டு அந்தச் சிறிய குருவி நடுங்கி விட்டது. அங்கிருந்து உடனே பறந்துபோய் மரத்தின் மீது உட்கார்ந்து அழுது கொண்டிருந்தது. அந்த மரத்திலே வசித்துக் கொண்டிருந்த சிலந்திப் பூச்சி ஒன்று குருவியிடம் நட்புக் கொண்டிருந்தது. குருவி அழுவதைப் பார்த்து, சிலந்தி அதனிடம் வந்தது. "ஏன் அழுகிறாய் ? " என்று கேட்டது. நடந்ததையெல்லாம் குருவி விளக்கமாகச் சொல்லிற்று.

" நான் கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டேன். சிங்கராஜாவுக்குக் கோபம்தான் வந்தது. எனது சிறிய உருவத்தைப் பார்த்து அது என்னை அவமதித்துப் பேசிவிட்டது. நான் என்ன செய்வேன்? சிங்கத்தோடு சண்டையிட என்னாலாகுமா ? குஞ்சுகளை நினைத்தால்தான் எனக்கு ஒரே அழுகையாக வருகிறது " என்று சொல்லிவிட்டு மேலும் அழத் தொடங்கியது. சிலந்தி அதற்குத் தைரியம் கூறிச் சிங்கத்தைப் பணியவைப்பதற்கு ஒரு தந்திரம் சொல்லிக் கொடுத்தது.

அடுத்த நாள் நடுப்பகல் வேளையில் சிங்கம் வழக்கம்போல் மரத்தின் அடியில் படுத்து உறங்கத் தொடங்கியது. சிலந்தி மெதுவாகப் போய் சிங்கத்தின் மூக்கினுள் நுழைந்துகொண்டது. மூக்கிற்குள் என்னவோ குடைகிறதென்று சிங்கம் எழுந்து துள்ளியது. சிலந்திப் பூச்சியை மூக்கிலிருந்து வெளியில் கொண்டுவர வழிதெரியாமல் மிரண்டு காட்டிற்குள் ஓடத் தொடங்கியது.

சிலந்தி மூக்கிற்குள் 'புருபுரு' என்று தனது எட்டுக்கால்களையும் அசைக்கும். சிங்கத்திற்குத் தும்மல் வருவதுபோல இருக்கும்; ஆனால் வராது. மறுபடியும் வருவது போல் இருக்கும். அதனால் சிங்கம் மூக்கிற்குள்ளிருந்து ஏதோ வருவதாக எண்ணி, பயந்து துள்ளிக்குதித்து ஓடியது.

ஓரிடத்திலே முயல்கள் கூட்டமாகக் கூடி புல் மேய்ந்து கொண்டிருந்தன. அவை தமது ராஜாவாகிய சிங்கம் இப்படி ஓடிவருவதைப்பார்த்து, 'மகாராஜா, ஏன் இப்படி ஓடிவருகிறீர்கள்?' என்று கேட்டன.

"ஐயோ, வருதே" என்று சொல்லிவிட்டு சிங்கம் துள்ளிக் குதித்து மேலும் ஓடலாயிற்று. அதைக் கண்டு என்னவோ வருகிறது என்று பயந்துகொண்டு முயல்களெல்லாம் சிங்கத்தையும் முந்திக்கொண்டு ஓடத் தொடங்கின. முயல்கள் ஓடிவருவதை ஒரு மான்கூட்டம் பார்த்தது. "முயல்களே, ஏன் இப்படி ஓடி வருகிறீர்கள்?" என்று ஒரு மான் கேட்டது.

"என்னமோ வருகிறதாம். நம்ம ராஜாவே சொல்லுகிறார்; அவரும் ஓடி வருகிறார்" என்று



முயல்கள் கூறிக் கொண்டே ஓடின. அதைக் கண்டு முயல்களையும் முந்திக்கொண்டு மான்கள் ஓட ஆரம்பித்தன. அவற்றை ஒரு புலிக்கூட்டம் பார்த்தது. மான்கள் "வருதே வருதே" என்று கூச்சலிட்டன. அதைக்கேட்டுப் புலிகளும் "வருதே வருதே" என்று ஓலமிட்டுக் கொண்டு ஓட ஆரம்பித்தன.

யானைகள் கூட்டமாக ஓரிடத்தில் நின்று கொண்டிருந்தன. நடந்தது இன்னதென்று அறியாமல், "நமது ராஜாவே ஓடிவருகிறார். என்னவோ வருகிறதாம், நாமும் ஓடத்தான் வேண்டும்" என்று கூறிக்கொண்டே யானைகளும் ஓடத் தொடங்கின.

இப்படியாக இந்த விலங்குகளெல்லாம் காட்டை சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டு ஓடின. "வருதே வருதே" எனும் கூச்சல் எங்கும் கேட்டது.



சிங்கம் காட்டைச் சுற்றிப் பலமுறை ஓடியதால் மிகவும் களைத்துப் போய் விட்டது. அதற்கு மூச்சுவிடக்கூட முடியவில்லை. அதனால் அது குருவி கூடுகட்டியிருந்த மரத்திற்கே வந்து மூச்சுத் திணறி நின்று விட்டது.

சிலந்தி கூறிய தந்திரத்தின்படி குருவி சிங்கத்தின் அருகே போய், "மகாராஜா, ஏன் இப்படிப் பெருமூச்சு வாங்குகிறீர்கள் ?" என்று கேட்டது. அந்தச் சமயம் பார்த்துச் சிலந்தி மூக்கிலே புருபுரு என்று செய்ய ஆரம்பித்தது. "ஐயோ, வருதே" என்று சிங்கம் குதித்தது. "மகாராஜா, கொஞ்சம் கீழே படுங்கள். உங்கள் மூக்கை நான் பார்க்கிறேன். எல்லாம் சரியாகிவிடும்" என்று குருவி கூறிற்று. சிங்கம் வேறு வழியறியாது கீழே படுத்தது. குருவி மூக்கின் அருகே போய் கீச்சுக்கீச்சென்று மெது

வாகக் குரல் கொடுத்தது. உடனே சிலந்திப் பூச்சி வெளியில் வந்து சிங்கத்தின் கண்ணில் படாமல் மறைந்தோடிவிட்டது.

"ஆகா ஒண்ணும் வரவில்லை. தும்மல் வர வில்லை" என்று கூறிக்கொண்டே பெருமகிழ்ச்சி யோடு சிங்கம் குதிக்கத் தொடங்கியது. மற்ற விலங்குகளும் " ஒன்றும் வரவில்லை, ஒன்றும் வர வில்லை; இனிப்பயம் இல்லை" என்று குதித்தன. முயல்கள் தக்க திக்க தக்க திக்க தைதை தக்க திக்க தைதை" என்று நடனமாடிக் கொண்டே மகிழ்ச்சியோடு சென்றன.

மான்கள் ஒரு பாறையின் மீது 'டக்டிக்டிக்டிக்' டக்கா டக்கா டக்டிக்டிக்டிக் ' என்று தமது குளம்பு களால் ஒலியெழுப்பிக் கொண்டு ஆடிவிட்டு நகர்ந்தன.



புலிகள் தமது மெத்தென்ற பாதங்களில் 'தத்தந்தின்ன ததின்ன தத்தந்தின்ன ததின்ன' என்று நாட்டியமாடியவாறே சென்றன.

யானையின் கால் மிகவும் பெரியதல்லவா? அதனால் யானைகள் ' தப் ...திப் ...தப் ...திப் ...தப்

...திப்! ... தப் ...திப் ...தொப் ...தொப்' என்று பூமி அதிர நாட்டியமாடிக் கொண்டே அந்த இடத்தைவிட்டு அகன்றன.

சிங்கம் இவற்றையெல்லாம் பார்த்துவிட்டு 'ஜம். . ஜம் . . ஜிம் ஜிம் ஜம்ஜிம் ஜம்ஜிம் என்று ஆடிற்று. பிறகு குருவியைப் பார்த்துச் சிங்கம், " நீ ஒரு சிறிய குருவி என்று நான் உன்னை அற்பமாக நினைத்துவிட்டேன். அது தவறு என்று எனக்கு இப்பொழுது தெரிகிறது. நீ எனக்கு நல்ல உதவி செய்தாய். அதனால் இனிமேல் நான் படுத்துறங்குவதற்கு இங்கு வரமாட்டேன். குஞ்சுகளுக்குப் பயம் ஏற்படுமாறு இங்கு கர்ஜனையும் செய்யமாட்டேன்" என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டது.

குருவியும் அதன் குஞ்சுகளும், சிலந்திப் பூச்சியின் தந்திரத்தால் தொல்லை நீங்கி இன்பமாக வாழ்ந்தன.



# சர்க்கஸ் குரங்கு

ஒரு சர்க்கஸ் கம்பெனியைச் சேர்ந்த குரங்கொன்று எப்படியோ கூண்டிலிருந்து தப்பித்துக் கொண்டு ஒரு பெரிய காட்டை அடைந்தது. செல்லும்போது கூடவே தான் சர்க்கஸில் வேடிக்கை செய்யும்போது அணிந்து கொள்ளும் சிவப்புநிறக் கால்சட்டை, பச்சைநிறக் கோட்டு, தலையில் அணியும் தொப்பி நெஞ்சுக்கு நேராகக் கம்பீரமாக அணிந்துகொள்ளும் பதக்கங்கள், முகத்தில் பூசிக்கொள்ளும் சாயங்கள் ஆகிய இவை எல்லாம் இருந்த ஒரு பெட்டியையும் எடுத்துக் கொண்டு சென்றது. அந்தப் பெட்டியை ஓர் உயர்ந்த மரத்தின் மேல்கிளையொன்றில் மறைவாகக் கட்டி வைத்துவிட்டுக் காட்டுக்குள்ளே உல்லாசமாக ஓடியாடி விளையாடியது. தின்பதற்கு

அங்கே நிறையப் பழங்களும், கொட்டைகளும் கிடைத்தன. இரண்டு மூன்று நாட்கள் இப்படி விளையாடுவது இன்பமாக இருந்தது.

ஆனால் இந்த வாழ்க்கையில் அதற்கு விரைவில் அலுப்புத் தட்டிவிட்டது. சாப்பிடுவதும், தூங்குவதுமாக இருக்கும் வாழ்க்கை அதற்குப் பிடிக்கவில்லை.

அதனால் ஒரு நாள் அதிகாலையில் அது அந்தக் காட்டில் ஆட்சி செய்யும் சிங்கராஜாவிடம் சென்றது. போகும்போது தனது சர்க்கஸ் உடைகளை மாட்டிக் கொண்டது. வெள்ளி, தங்கப் பதக்கங்களை நெஞ்சுக்கு நேராகக் குத்திவைத்துக் கொண்டது. முகத்திலே சிவப்பு, மஞ்சள், கறுப்பு ஆகிய எல்லாச் சாயங்களையும் நன்றாகப் பூசி அழகு செய்துகொண்டது. தலையில் தொப்பியை வைத்துக் கொண்டு நேராகச் சிங்கத்தின் குகை



யினுள் சென்று, "மகா ராஜா! குட்மார்னிங்" என்று சலாம் செய்தது. சிங்கம் அப்பொழுது தான் படுத்து உறங்கத் தொடங்கியதால் சட்டென்று அதற்கு ஒன்றும் விளங்கவில்லை. ஏதோ ஒரு புதுமாதிரியான மிருகம் அங்கு தோன்றியிருப்பதாக அது நினைத்தது. "என்ன சொன்னுய்?" என்று கொட்டாவி விட்டுக்கொண்டே கேட்டது. "குட்மார்னிங், குட்மார்னிங்" என்று குரங்கு மறுபடியும் சலாம் செய்தது. "அப்படியென்ருல் என்ன? எனக்கு விளங்கவில்லையே?" என்று சிங்கம் ஆச்சரியத்தோடு கேட்டது.

உடனே குரங்கு தைரியமாக, "நீங்கள் எல்லாம் நாட்டுப்புறம். உங்களுக்கு விளங்காது" என்றது.

"நாட்டுப்புறமா?" என்று மேலும் சந்தேகத்தோடு சிங்கம் கேட்டது. "இல்லை, இல்லை, நீங்கள் நாட்டுப்புறமல்ல. காட்டுப்புறம். இரண்டுக்கும் இது விளங்காது. குட்மார்னிங் என்ருல் காலைவணக்கம் என்று தெரிந்து கொள்ள வேண்டும். பட்டணத்திலே நாங்களெல்லாம் இப்படித்தான் காலையிலே சொல்லுவோம்" என்றது குரங்கு. "அப்படியா?" என்று தனது அறியாமையை ஒப்புக்கொண்டது சிங்கம். குரங்கினிடத்திலே அதற்கொரு மரியாதையும் ஏற்பட்டது. "இவ்வளவு அதிகாலையிலே எதற்கு வந்து என் தூக்கத்தைக் கலைத்தாய்?" என்று கேட்டது சிங்கம்.

"மஹாராஜா! இப்படியே தினமும் வேட்டையாடுவதும், சாப்பிடுவதும், தூங்குவதுமாக இருந்தால் வாழ்க்கையிலே அலுப்பு

ஏற்படாதா ? இது என்ன வாழ்க்கை ? நாம் கொஞ்சம் ஜாலியாக இருக்கவேண்டும் " என்று குரங்கு சொல்லிற்று.

" அதென்னடா ஜாலி ? " என்று கேட்டது சிங்கம்.

" ஓஹோ ! மறந்துவிட்டேன். நீங்களெல்லாம் காட்டுப்புறம். உங்களுக்கு இந்த வார்த்தை விளங்காது. நாம் கொஞ்சம் வேடிக்கையாக, குஷியாக, தமாஷாக இருக்கவேண்டும். அது தான் ஜாலி " என்றது குரங்கு. " அதற்கென்ன செய்யலாம் ? " என்று சிங்கம் ஆவலோடு கேட்டது. " மஹா ராஜா நீங்கள் இந்தக் காட்டிலுள்ள விலங்குகள் உயிரினங்கள் எல்லாவற்றையும் நான் சொல்லுவதை கேட்டு நடக்க உத்தரவு செய்யுங்கள். நான் இங்கே ஒரு தமாஷான சர்க்கஸ் ஏற்பாடு செய்கின்றேன் " என்றது. " அதை யார் நடத்துவார்கள் ? " என்று சிங்கம் கேட்டது. " நான் தான் ரிங்மாஸ்ட்டராக இருந்து நடத்துவேன் " என்று குரங்கு சொல்ல விரும்பிற்று. ஆனால் அதற்கு ரிங்மாஸ்டர் என்ற பெயர் மறந்து போய்விட்டது. அதைப்பற்றி யோசனை செய்கின்றபொழுது ஏதோ ஒரு மரத்திலிருந்து " க்ரங், க்ரங், க்ரங்" என்று ஒரு பறவை செய்யும் ஓசை காதில் விழுந்தது. உடனே குரங்கு, "நான்தான் குரங்மாஸ்டர் ; இதோ பாருங்கள் என் கச்சையிலே சாட்டையும் இருக்கின்றது. இந்தச் சாட்டையால் விலங்குகளின் முதுகில் லேசாகத் தட்டுவேன். அவைகளெல்லாம் நல்ல நல்ல வித்தைகள் செய்யும் " என்று பதில் சொல்லிற்று.

"ஓஹோ நீ குரங் மாஸ்டரா? சரி, உன் விருப்பப்படி ஆணையிடுகிறேன்" என்று சிங்கம் மகிழ்ச்சியோடு கூறிவிட்டு, தனது மந்திரி குள்ள நரியை அழைத்து, குரங்மாஸ்டர் சொல்லுவது போல எல்லோரும் நடக்கவேண்டும் என்று உத்தரவு இடுமாறு செய்தது.

அந்த நாள் முதற்கொண்டு புலி, யானை, மான், குள்ளநரிகள், குரங்குகள், ஒட்டகச் சிவிங்கிகள் இவற்றையெல்லாம் வைத்து வித்தை கள் தவருமல் ஒத்திகை செய்யப்பட்டன. இந்தக் கூட்டத்திலிருந்த ஒரு நொண்டிக் குரங்குக்குத் தானும் குரங்மாஸ்டராக ஆகவேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. அதனால் அது சர்க்கஸ் குரங்கைப் பார்த்து, "பெரிய குரங்மாஸ்டரே உங்களுக்கு சலாம் செய்கிறேன். என்னையும் உங்க



ளோடு ஒரு சின்ன குரங் மாஸ்டராக ஏற்றுக் கொள்ளவேண்டும்" என்று கெஞ்சிக் கேட்டது. அதற்கு சர்க்கஸ் குரங்கு, "போடா நொண்டிப் பயலே. உனக்கு என்னடா தெரியும்? ஓடிப்போ; என் முன்னுலே நின்ருல் சாட்டை அடி கிடைக்கும்" என்று அலட்சியமாகப் பேசி அனுப்பி விட்டது. அதிலிருந்து அந்த நொண்டிக் குரங்கு பழிவாங்கவேண்டும் என்று சமயம் பார்த்துக் கொண்டு இருந்தது.

கடைசியில் சர்க்கஸ் நடக்கும் இரவு வந்தது. காட்டுக்குள்ளே ஒரு திறந்த வெளியில் எல்லா விலங்குகளும் சிங்கராஜாவும் கூடின. அந்தத் திறந்த வெளியைச் சுற்றிலும் உயரமான மரங்கள் அடர்த்தியாக இருந்தன. மேலே கிளைகளெல்லாம் ஒரு கூடாரம்போல அந்தத் திறந்தவெளியை மறைத்துக் கொண்டு இருந்தன. குரங்மாஸ்டரின் உத்தரவுப்படி அந்த மரங்களிலெல்லாம் லட்சக் கணக்கான மின்மினிப் பூச்சிகள் மின்னிமின்னி வெளிச்சம் தந்துகொண்டு இருந்தன. ஐம்பது குரங்குகள் கொடிகளையும், தழைகளையும், பூக்களையும் பறித்துவந்து தோரணங்கள் கட்டின. வாயில் பக்கத்தில் இரண்டு ஒட்டகச்சிவிங்கிகள் காவல் காரர்களாக நின்றன. ஒன்றின் கழுத்திலிருந்து மற்றுென்றின் கழுத்திற்குத் தோரணம் கட்டினுர்கள். குள்ளநரிகள் ஊளையிட்டு வரவேற்பு அளித்தன. இப்படியாகக் கோலாகலமாக சர்க்கஸ் தொடங்கிற்று. குதிரைகளுக்குப் பதிலாக மான்கள் வட்டமாக ஓடி வித்தைகள் காட்டின. குரங்மாஸ்டர் மத்தியில் சாட்டையுடன் நின்றுகொண்டு அவைகளை வெவ்வேறு வகையாக ஓடச் செய்தது. பிறகு ஐம்பது



குரங்குகள் கரணம் அடிப்பதும், கிளைகளில் தாவிப் பாய்வதும், ஒன்றன் மேல் ஒன்று ஏறி நிற்பதும், மானின் வாலைப் பிடித்துத் தொங்கிக் கொண்டு ஓடுவதும் இப்படி விளையாட்டுக்கள் காண்பித்தன யானைகள் பின்னங்கால்களைத் தரையில் ஊன்றிக் கொண்டு முன்னங்கால்களை மேலே தூக்கி சலாம் செய்தன. ஒரு யானையின் முதுகில் மற்றொரு யானை தன் முன்னங்கால்களைத் தூக்கிவைத்துக் கொண்டு இரண்டும் சுற்றி வந்தன. புலி தீப்பந்த வளையத்தில் தாவிக் குதித்தது. மான் ஒன்று புலியின் முதுகில் ஏறி நிற்க மஹாராஜா அவற்றிற்கு மேல் பாய்ந்து தாண்டினார். இதைக் கண்டதும் எல்லா விலங்குகளுக்கும் ஒரே உற்சாகம் ஆகிவிட்டது. எல்லாம் மத்தியில் வந்து கரணம் அடிப்பதும் குதிப்பதும் நடனம் ஆடுவதுமாக இருந்தன. அந்த சமயம் பார்த்து நொண்டிக்குரங்கு யாருக்கும் தெரியாமல் ஒரு மரத்தின் மேலே ஏறியது. திறந்த வெளி மேலே நீண்டு வளர்ந்திருக்கும் ஒரு கிளையில் தொங்கிய பெரிய மலைத்தேன் கூட்டை

கிளையோடு மெதுவாக ஒடித்து விலங்குகளின் மத்தியில் தொப்பென்று போட்டது. மேலேயிருந்து விழுந்ததால் கோபம் கொண்ட அந்தத் தேன் பூச்சிகள் விலங்குகளையெல்லாம் கொட்டத் தொடங்கின. மின்மினிப் பூச்சிகளெல்லாம் பயந்து பறந்தோடிவிட்டதால் எங்கும் இருள் சூழ்ந்துகொண்டது. விலங்குகளெல்லாம் ஒன்றோ டொன்று மோதிக்கொண்டு தத்தளித்தன. மஹா ராஜாவை ஐந்தாறு மலைத்தேனீக்கள் முகத்திலே



கொட்டிவிட்டன. அதன் உதடுகள் வீங்கி விட்டன. குரங்மாஸ்டர் தான் இப்படி விஷமம் செய்திருப்பதாக நினைத்து, சிங்கம் ' எங்கே அந்தக் குரங்மாஸ்டர் ? அவனைப் பிடித்து வா '' என்று கோபத்தோடு கர்ஜனை செய்தது.

சர்க்கஸ் குரங்கு தப்பிப் பிழைத்தால் போதும் என்று ஓட்டமாக ஓடி, இனிமேல் இந்தக் காட்டுப் புறம் வேண்டாம்; எல்லாரும் மடப்பயல்கள்; பழையபடி சர்க்கஸ் கம்பெனிக்கே போவோம் என்று திரும்பிவிட்டது,